Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 707/2005

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரிமுத்து | Father/Husband Name | : ராமு |
| Age | : | Calling | : |
| Date | : 14.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 14 day of 06.2026.

**Witness appeared through VC on Microsoft Teams virtual Platform on link shared from court**
**Staring Time: 11.34 P.M**
( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி 2009ம் ஆண்டு பணி ஒய்வு பெற்று ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன்.

கடந்த 24.03.2025ம் தேதி 12.35 மணிக்கு மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.இராமேஷ்வரி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அருண்குமார் என்பவரின் மனைவி லதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 515/05, பிரிவுகள் 498(A), 323, 506(ii) இதச மற்றும் வரதட்சனை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன்கீழ் முதல தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்துள்ளார். 01.06.2005ம் தேதி புலன்விசாரணை அதிகாரி

திருமதி.இராமேஷ்வரி பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார்.

அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகளான பிரபு, அழகு, சிங்காரவேலு, லதா, லெட்சுமணன், ராஜேஷ், முருகன், கண்ணன், மற்றும் மற்ற சாட்சிகளை விசாரித்ததில் இதற்கு முன் விசாரணை செய்த புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்னதையே என்னிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலம் தயார் செய்யவில்லை.

பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 12.12.2005ம் தேதியன்று 1 முதல் 5 எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 323, 506(ii) இதச மற்றும் வரதட்சனை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்குவிசாரணை**

சம்பவ இடம் சென்று எனக்கு முன்னர் புலன்விசாரணை செய்த ராமேஷ்வரி விசாரணை செய்த சாட்சிகளை நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. புகார்தாரர் லதாவை பெண் மருத்துவரிடம் அழைத்து சென்று பரிசோதனை செய்து அவர் கர்ப்பமாக இருக்கிறாரா என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரர் லதாவின் உடன்பிறந்த சகோதரி, தாயார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரரையும், அவரது கணவராக 1ம் எதிரியையும் சமூக நல ஆர்வலர் அல்லது மனநல மருத்துவரிடம் ஆலோசனைக்கு அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. சம்பவ நடந்த இடத்தில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. வரதட்சணை கேட்டதாக இரண்டு குடும்பத்தினரையும் சேர்த்து

விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரை எழுதியது யார் என்று கண்டறிந்து அவரை இவ்வழக்கு சாட்சியாக விசாரித்தேனா என்றால் தலைமை காவலர் 891 செல்வராஜன் என்பவரிடம் லதா எழுத்துபூர்வமான புகாரை கொடுத்துள்ளார். புகார்தாரரின் தந்தையும், 1வது எதிரியின் தாயாரும் உடன் பிறந்த சகோதரன் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

2) நான் சொல்வதுபோல் புகார்தாரர் லதாவிற்கு எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, மருத்துவர் பரிசோதனை செய்து சான்று வழங்கியுள்ளார். எதிரிகள் கைது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் இராமேஷ்வரியை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் புகார்தாரர் லதாவை அடித்து காயப்படுத்தவோ, வரதட்சணை கேட்கவோ, கொடுமைப்படுத்தவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை, எதிரி 3 மற்றும் 4ம் எதிரியும் வெளியூரில் தங்கி இருந்தார்கள் அதனால் தான் அவர்களை கைது செய்யவில்லை, எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.